வலயக் கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு மத்தி

# மட்/மம/ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியலயம்

## விடுமுறைக் கால விஷேட செயற்திட்டம் - 2020

"விடுமுறையை வெற்றிகரமாக செயற்படுத்துதல்"

| தரம் 11 | தமிழ் மொழியும் இலக்கியமும் | முயற்சி 01 |
|---|---|---|

**ஆசிரியர்: திரு. எம்.ஐ.சாஜஹான்**

**தமிழ் மொழியும் இலக்கியமும் – I**

1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. 'மறையென லறியா **மாயமி** லாயமொடு' – மாயம் என்பதன் பொருள்
   (i) பொய் (ii )வஞ்சம் (iii )பொறாமை (iv )மர்மம்

2. '...எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு' – இதில் அளறு என்பதன் பொருள்
   (i) துன்பம் (ii) வஞ்சம் (iii) நரகம் (iv) பிறவி

3. 'என்றலுமே **யடி**யின்மிசை வீழ்ந்தழுவானை' – இதில் அடி என்பதன் எதிர்க்கருத்து
   (i) பாதம் (ii) அடித்தல் (iii) முடி (iv) முதல்

4. 'தவறான கட்டளைகளைப் பிறப்பித்து விட்டால் தானே எஜமானன் ஆகிவிடும்' – எஜமானன் என்பதன் எதிர்ப்பால்
   (i) எஜமானி (ii) எஜமானினி (iii) எஜமாட்டி (iv) எஜமானை

5. அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் ஆகியோர்
   (i) ஐம்பெரியார் (ii) ஐம்மூத்தோர் (iii) ஐந்நிலத்தோர் (iv) ஐங்குரவர்

6. பிறர் அறியாதபடி மாறுவேடம் பூண்டு கரந்து வாழும் வாழ்க்கை
   (i) வனவாசம் (ii) அஞ்ஞாதவாசம் (ii) மறைவாழ்வு (iv) வேடம்பூணல்

7. கீரி,அணில் ஆகியவற்றின் இளையதைக் குறிக்கப் பொருத்தமான சொற்கள்
   (i) குட்டி, பிள்ளை (ii) குஞ்சு, பிள்ளை (iii) குருளை, பிள்ளை (iv) பிள்ளை, பிள்ளை

8. கடல், சக்கரம், மோதிரம் என்ற பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
   (i) ஆழி (ii) ஆளி (iii) ஆலி (iv) கலி

9. 'இன்று பல இடங்களிலும் CCTV கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன' - CCTV கமரா என்பதற்குரிய கலைச்சொல்
   (i) கண்காணிப்புக் கருவி (ii) புகைப்படக் கருவி (iii) மறைகாணி (iv) ரகசியப் புகைப்படக் கருவி

10. அனைத்தையும் சமமாகக் கருதுதல் என்பதற்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
    (i) ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கல் (ii) தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன்
    (iii) உள்ளங்கை நெல்லிக்கனி (iv) நரைதிரை மூப்புறு காலம்

11. யானைகள் கட்டப்படும் இடம்
    (i) பந்தி (ii) லாயம் (iii) தொழுவம் (iv) பண்ணை

12. பின்வருவனவற்றுள் எதிர்ப்பொருள் தரும் சொற்களைக் கொண்டமையாத இணைமொழி
(i) அகடவிகடம் (ii) ஏற்ற இறக்கம் (iii) இன்பதுன்பம் (iv) மேடுபள்ளம்

13. விடாமுயற்சியைக் குறிக்கும் மரபுத் தொடர்
(i) கல்லில் நார் உரித்தல் (ii) அண்டிதகர்தல் (iii) பகீரதப் பிரயத்தனம் (iv) பிரயாசைப் படல்

14. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு பழமொழிக்குப் பொருத்தமான கருத்தைத் தரும் மற்றொரு பழமொழி
(i) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு (ii) அளவு இட்டவரைக் களவு இடலாமா
(iii) அளவறிந்து வேலை செய்தால் விரல் மடக்கப் பொழுது இல்லை (iv) மருந்தும் விருந்தும் மூன்று நாளைக்கு

15. 'காதன்மை கையல்லதன் கண் செயல்' – காதன்மை என்பதைப் பிரித்து எழுதினால் வருவது
(i) காது+அன்மை (ii) காதல்+மை (iii) காதன்+மை (iv) காத+அன்மை

16. வினைச்சொல்லுடன் விகுதி சேர்ந்து உருவாகும் ஆக்கப்பெயருக்கு உதாரணமாக அமைவது
(i) புத்திசாலி (ii) ஆய்வாளன் (iii) முயற்சி (iv) அரசியல்

17. உயிர் முன் உயிர் புணர்வதற்கு உதாரணமாக அமைவது
(i) மெய்யெழுத்து (ii) சனிக்கிரகம் (iii) கொல்லேறு (iv) பனையோலை

18. வெள்ளிக்கொலுசு என்பது
(i) வேற்றுமைத் தொகை (ii) வினைத் தொகை (iii) உவமைத் தொகை (iv) இருபெயரொட்டுப் பண்புதொகை

19. காரண இடுகுறிப் பெயருக்கு உதாரணமாக அமைவது
(i) பறவை (ii) மண்வெட்டி (iii) சுவரொட்டி (iv) வளையல்

20. பின்வருவனவற்றுள் வினை எச்சமாகவும் முற்றாகவும் அமைவது
(i) ஓட (ii) ஓடு (iii) ஓடும் (iv) ஓடி

(20 புள்ளிகள்)

**தமிழ்மொழியும் இலக்கியமும் II**

1. சுருக்கமான விடை எழுதுக.
   - (i) பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
     ”விலங்கற் றிண் டோட் கைவீரக் களிறனைய காளை யிவன்”
   - (ii) “மலை போல் துன்பம் தீரும் பனி போல்” – இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.
   - (iii) ‘புகழ் பெற்ற ஐ.நா. சபையின் பிரதிநிதிகள் சிலர் இலங்கைக்கு வருகை தந்தனர்’ – இவ்வாக்கியத்திலுள்ள மயக்கத்தை நீக்கி எழுதுக.
   - (iv) ”இப்ப ஏலா மனெ, நேரம் பெய்ட்டு, நாள ராவக்கி சொல்ரன், வா படுப்பம்.” – இத்தொடரை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக.
   - (v) ‘தாய் சோறு உண்டாள்’ – இவ்வாக்கியத்தைப் பிறவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(10 புள்ளிகள்)

2. பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 – 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

   கோக்கோதை மார்பன், கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணான், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆகிய இவர்கள் கடைச்சங்க காலத்தின் இறுதியில் சமகாலத்தில் இருந்த அரசர்கள். இவர்களுக்குப் பிறகு இவர்களது மக்கள் அல்லது உறவினர் சேர, கொங்கு, சோழ, பாண்டிய நாடுகளை அரசாண்டார்கள். இவர்களுடைய பெயர் தெரியவில்லை. இவர்கள் காலத்தில் அயல்நாட்டார் வந்து தமிழ் நாட்டைக் கைப்பற்றி அரசாண்டார்கள். அவர்கள் களப்பிரர் என்று கூறப்பட்டார்கள். களப்பிரர் தமிழ் நாட்டைக் கைப்பற்றி அரசாண்ட வரலாறு மறைந்து போய் நெடுங்காலமாகப் பல நூற்றாண்டு வரையில் தெரியாமல் இருந்தது. கி.பி.20 – ம் நூற்றாண்டு வரையில் மறைந்து போயிருந்த களப்பிர அரசைப் பற்றின வரலாற்றுச் செய்தி, பாண்டியருடைய செப்பெடுகள் கிடைத்த பிறகு அவைகளிலிருந்து தெரியவந்தன. திரு.கே.ஜி.சங்கரன் அவர்கள் வட்டெழுத்தில் எழுதப்பட்ட வேள்விக்குடிச் செப்பேட்டை இக்காலத் தமிழ் செந்தமிழ்த் திங்களிதழில் வெளியிட்டார். அதன் பிறகு இந்திய சாசன இலாகா 1923 – ம் ஆண்டில் எபிகிறாபியா இந்திகா எனும் ஆங்கில வெளியீட்டில் வேள்விக்குடி சாசனத்தை ஆங்கில (இலத்தீன்) எழுத்தில் வெளியிட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு தளவாய்புரச் சாசனம் கிடைத்ததும் இந்தச் செப்பேடுகளிலிருந்து களப்பிர அரசர்களைப் பற்றி அறிகிறோம்.

   வேள்விக்குடிச் செப்பேடு வெளியான பிறகுதான் களப்பிரரைப் பற்றின செய்தி அதன் பிறகு களப்பிர்ரைப் பற்றிப் பல அறிஞர்கள் எழுதத் தொடங்கினார்கள். ஆனால் களப்பிரரைப் பற்றின முழு வரலாறு இன்றுங் கிடைக்கவில்லை.

(10 புள்ளிகள்)

3. தற்போது உலகளவில் உயிர் காவும் கொள்ளை நோயான கொரோனா மக்களை அச்சுறுத்தி வருகின்றது. மக்கள் தமது அறியாமையின் காரணமாக அத்தொற்று நோய்க்கு ஆளாகும் அபாயம் வலுத்து வருகின்றது. எனவே இதிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் பொறிமுறைகளை மக்களுக்கு விளக்கும் வகையில் 100 சொற்களில் அமைந்த ஒரு **துண்டுப்பிரசுரம்.**

(15 புள்ளிகள்)

## தமிழ்மொழியும் இலக்கியமும் III

1.

(i) “உடர் எலா முயிரிலா வெனத் தோன்று முலகத்தே யிடரிலா முகத்தாளை யறிந்திலையாயின்..”

அ) இதில் எவருடைய துன்பம் கூறப்படுகின்றது?

ஆ) இடரிலா முகத்தாள் எனப்படுபவர் யார்?

(ii) சினிமா மொழியில் படத்தொகுப்பு எனப்படுவது யாது?

(iii)‘மறையென லறியா மாயமி லாயமொ டுயர் சினையுறத் தாழ்ந்து’ எனும் புறநானூற்றுப் பாடலடியில் குறிப்பிடப்படும் இளமையின் இயல்புகள் யாவை?

(iv) பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்கின்ற ‘பிறகு’ அந்த சபையில் நிலவியது.

அ) பிரசண்ட மாருதம் என்பது யாது?

ஆ) சபையில் அந்தப் ‘பிறகு’ நிலவியமைக்கான காரணம் யாது?

(v) மிக்காரைச் சேர்தல் மிகமாண முன் இனிதே

அ) இச்செய்யுளைப் பாடியவர் யார்?

ஆ) மிக்கார் எனப்படுபவர் யார்?

(10 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுட்பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i)
முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பக வானுகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவி னீசர்
வளம்பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே

அ) குற்றால மலையின் நீர்வளம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

ஆ) அதனை எடுத்துக்காட்டுவதற்குப் புலவர் கையாண்ட உத்தியை விளக்குக.

இ) குற்றால நாதரின் சிறப்பாகக் குறிப்பிடப்படுவது யாது?

(ii)
அறந்தானே யென்கின்ற வயனின்றா
டனைநோக்கி யைய வன்பி
னிறைந்தாளை யுரையென்ன நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான் றனிளந்தேவி யாவர்க்குந்
தொழுகுலமா மிராமன் பின்பு
பிறந்தானு முளனென்னப் பிரியாதான்
றனைப் பயந்த பெரியா ளென்றான்

அ) தசரதனின் சிறப்பாகக் குறிப்பிடப்படுவது யாது?

ஆ) இராமனின் பெருமை எனக் கூறப்படுவது யாது?

(10 புள்ளிகள்)

**3. இலட்சியமும் சமநோக்கும் எனும் கட்டுரையில்,**

அ) இலட்சியத்துக்காகத் தம்மையே தியாகம் செய்தவர்கள் மத்தியில் இலட்சியப் பயனைத் தியாகம் செய்தவர்கள்.

ஆ) இலட்சியங்கள் அழிந்து போகாமல் நம்முள்ளத்தில் கலந்து நிற்பதற்கான காரணங்கள்.

ஆகியவற்றைத் தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)

**4. திருக்குறள் பேதைமை எனும் அதிகாரத்தில்,**

அ) பேதையின் இயல்புகள்

ஆ) கையாளப்பட்டுள்ள உவமையணிச் சிறப்புகள்

ஆகியவற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம்-100 புள்ளிகள்)